# දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
# DEPARTMENT OF INLAND REVENUE

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 - 2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543

දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135402/ 2135410/ 2135412 / 2135413/ 2135411

E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk


முத்திரைத் தீர்வைச் சுற்றறிக்கைக் கடிதம் :SEC/2019/02

14.05.2019

சகல மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள்,

**<u>2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடு) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டு) சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கட்டளைகளின் பிரகாரம், மதுபான விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதி பத்திரம் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப் பத்திரத்தின் மீதான நிலுவை முத்திரைத் தீர்வைகளை அறவீடு செய்து சேகரித்துச் செலுத்துதல்.</u>**

எனக்கு அனுப்பப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் PUR/D/IR/3/AQ/18/01 ஆம் இலக்க 2018.01.16 ஆந் திகதிய கணக்காய்வு விசாரணையின் போது,

(1) அரசிறைக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் FP/06/10/02/03 ஆம் இலக்க 2008.04.30 ஆந் திகதிய கடிதம் மூலமான அறிவித்தலுக்கமைய, அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட உள்நாட்டு, இறைவரி ஆணையாளரின் - (புலனாய்வு, சட்டம் மற்றும் முத்திரை வரி) – 2008.05.03 ஆந் திகதிய முத்திரை வரிச் சுற்றறிக்கை இல. 2008/02 மூலம் விடுக்கப்பட்ட அறிவித்தல்.

(2) அரசிறைக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் FP/06/10/01/04 ஆம் இலக்க 2017.01.10 ஆந் திகதிய, "உள்நாட்டு மதுபான விற்பனைக்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்திற்கான முத்திரைத் தீர்வை" எனும் தலைப்பினைக் கொண்ட கடிதம் மூலமான அறிவித்தலுக்கு அமைய அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட உள்நாட்டு இறைவரி ஆணையாளரின்- (முத்திரை வரி) – 2017.02.27 ஆந் திகதிய முத்திரை வரி 2017/01 இலக்க கடிதம் மூலம் விடுக்கப்பட்ட அறிவித்தல்.

ஆகியவைகளுக்கமைவாக மதுபான விற்பனை தொடர்பாக வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரம் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்கான ஏதேனும் அனுமதிப்பத்திரம் மீதான முத்திரைத் தீர்வை சட்டத்திற்கு முரணான வகையில்,

அறவிடப்படாமையினால் அரசாங்கம் இழந்துள்ள முத்திரைத் தீர்வை வருமானம் மாதிரி பரிசீலனை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

02.(1) ஏதேனும் பஞ்சாங்க வருடமொன்றுக்காக வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரமொன்று, ஏதேனும் பஞ்சாங்க வருடமொன்றில் ஒரு வருடத்துக்கு குறைந்த காலப்பகுதியில் ஏதேனும் இடமொன்றில் நடாத்தப்படும் மதுபான விற்பனை நிலையமொன்றிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைக் காலத்துக்குக் காலம் நீடிப்புச் செய்யும் அனுமதிப்பத்திரமொன்று, ஏதேனும் வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரத்துடன் உள்நாட்டு மதுபான விற்பனைக்காக வழங்கப்பட்ட ஏதேனும் சாராய அனுமதிப்பத்திரமொன்று அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்காக வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றின் மீதான முத்திரை தீர்வை,

i. 2006.04.03 ஆந் திகதிய **1439/1** ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 2006.04.04 ஆந் திகதியில் இருந்து 2006.10.05 ஆந் திகதி வரை வலுவுள்ளதாக்கப்பட்ட கட்டளை மற்றும் அதன் அட்டவணையின் 4ஆம் பிரிவுக்கு அமைய 2006.04.04 ஆந் திகதியில் இருந்து 2006.10.05 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூ.1000.00 உம்,

ii. 2006.10.05 ஆந் திகதிய **1465/19** ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 2006.10.06 ஆந் திகதியில் இருந்து 2007.12.31 ஆந் திகதி வரை வலுவுள்ளதாக்கப்பட்ட கட்டளை மற்றும் அதன் அட்டவணையின் 4 ஆம் பிரிவுக்கு அமைய 2006.10.06 ஆந் திகதியில் இருந்து 2007.12.31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபா 1000.00 அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் 10% ஆகிய இரண்டு பெறுமதிகளில் குறைந்த தொகையும்

iii. 2008.01.01 ஆந் திகதிய **1530/13** ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 2008.01.01.ஆந் திகதியில் இருந்து 2012.12.31 ஆந் திகதி வரை வலுவுள்ளதாக்கப்பட்ட கட்டளை மற்றும் அதன் அட்டவணையின் 4(ஆ) ஆம் பிரிவுக்கு அமைய 2008.01.01 ஆந் திகதியில் இருந்து 2012.12.31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபா 10,000.00 உம்,

அறவிடப்பட்டு சேகரித்து செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(2) 2012.12.17 ஆந் திகதிய **1789/9** ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 2013.01.01 ஆந் திகதியில் இருந்து 2018.09.30 ஆந் திகதி வரை வுலுவுள்ளதாக்கப்பட்ட கட்டளை மற்றும் அதன் அட்டவணையின் 4 ஆம் பிரிவுக்கு அமைய 2013.01.01 ஆந் திகதியில் இருந்து 2018.09.30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் பஞ்சாங்க வருடமொன்றுக்காக வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரமொன்று, ஏதேனும் பஞ்சாங்க வருடமொன்றில் ஒரு வருடத்துக்குக் குறைந்த காலப்பகுதியில் ஏதேனும் இடமொன்றில் நடாத்தப்படும் மதுபான விற்பனை நிலையத்துக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை காலத்துக்குக் காலம் நீடிப்புச் செய்யும் புதிய அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதன் காரணமான அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரம், ஏதேனும் வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரத்துடன் உள்நாட்டு மதுபான விற்பனைக்காக வழங்கப்பட்ட AFL 1, AFL 2, AFL 3 மற்றும் AFL 4 ஆகிய சாராய அனுமதிப்பத்திரங்களில், ஏதேனும் சாராய அனுமதிப்பத்திரமொன்று அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்காக வழங்கப்படும் ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றின் மீது முத்திரைத் தீர்வையாக ரூபா. 20,000.00 ஐ அறவிடப்பட்டு சேகரித்து செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(3) மேற்படி 01 மற்றும் 02 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேலான கவனத்தை செலுத்தி, அதற்கமைய ஏதேனும் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரமொன்று அல்லது ஏதேனும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்கான அனுமதிப்பத்திரமொன்றின் மீது அறவிடப்பட்டு சேகரித்து செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், உரியவாறு அறவிடப்பட்டு சேகரித்து செலுத்தப்படாத முத்திரைத் தீர்வையை அறவீடுசெய்து சேர்த்து அனுப்புவதற்கு துரித நடவடிக்கை எடுக்கும் படியும், சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வரையப்பட்ட காசோலை மூலம், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முத்திரைத் தீர்வை அனுப்பும் தாளின் மறுபக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, அனுப்பும் தாளை உரியவாறு பூர்த்தி செய்து, இலங்கை வங்கியில் 4153842 இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் முத்திரைத் தீர்வைக் கணக்கிற்கு 2019.06.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பும் படியும் அவ் அனுப்பும் தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட நிலுவை முத்திரைத் தீர்வையை அறவீடு செய்து சேகரித்து செலுத்துவது சம்மந்தமான தகவல்கள் உள்ளடங்கிய கூற்றினை உரியவாறு பூர்த்தி செய்து, பிரதேச செயலாளரினதும் கணக்காளரினதும் கையொப்பத்துடன் 2019.06.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், முத்திரைத் தீர்வைப் பிரிவு, 11 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு 02 எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பும்படி தயவுடன் தெரிவிக்கின்றேன்.

(4) 2018 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதிய **2091/3** ஆம் இலக்க, 2018 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய **2104/5** ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் அதன் அட்டவணையின் 4(ஆ) ஆம் பிரிவுக்கு அமைய 2018 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்படும் மதுபான விற்பனைக்காக வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்று அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்கான ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றின் மீது முத்திரைத் தீர்வை அறவிடப்பட வேண்டும் என்பதனை தயவுடன் தெரிவிக்கின்றேன்.

நதுன் குருகே
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

Nadun Guruge
Commissioner General
Department of Inland Revenue,
Sir Chittampalam A.Gardiner Mawatha,
Colombo 02.

பிரதிகள்

1. கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழுத் தலைவர்
2. செயலாளர் - நிதி அமைச்சு
3. மதுவரி ஆணையாளர் நாயகம்
4. செயலாளர் - பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்